ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 5.10 – பிறந்தவாறும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.10 – பிறந்தவாறும்

‡ பிறந்த ஆறும் வளர்ந்த ஆறும் ⋆
பெரிய பாரதம் கை செய்து ⋆
ஐவர்க்குத் திறங்கள் காட்டி இட்டுச் ⋆
செய்து போன மாயங்களும் ⋆
நிறம் தன் ஊடு புக்கெனதாவியை ⋆
நின்று நின்றுருக்கி உண்கின்ற ⋆
இச்சிறந்த வான் சுடரே ! ⋆
உன்னை என்று கொல் சேர்வதுவே ‖ **5.10.1** ‖

வதுவை வார்த்தையுள் ஏறு பாய்ந்ததும் ⋆
மாய மாவினை வாய் பிளந்ததும் ⋆
மதுவை வார் குழலார் ⋆
குரவை பிணைந்த குழகும் ⋆
அது இது உது என்னல் ஆவன அல்ல ⋆
என்னை உன் செய்கை நைவிக்கும் ⋆
முது வைய முதல்வா ! ⋆
உன்னை என்று தலைப்பெய்வனே ‖ **5.10.2** ‖

பெய்யும் பூங்குழல் பேய் முலை உண்ட ⋆
பிள்ளைத் தேற்றமும் ⋆
பேர்ந்தோர் சாடிறச் செய்ய பாதம் ஒன்றால் ⋆
செய்த நின் சிறுச் சேவகமும் ⋆
நெய் உண் வார்த்தையுள் அன்னை கோல் கொள்ள ⋆

நீ உன் தாமரைக் கண்கள் நீர் மல்க ⋆
பையவே நிலையும் வந்து ⋆
என் நெஞ்சை உருக்குங்களே ‖ **5.10.3** ‖

கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப் ⋆
புறம் புக்க ஆறும் ⋆
கலந்தசுரரை உள்ளம் பேதம் செய்திட்டு ⋆
உயிர் உண்ட உபாயங்களும் ⋆
வெள்ள நீர்ச் சடையானும் ⋆
நின் இடை வேறலாமை விளங்க நின்றதும் ⋆
உள்ளம் உள் குடைந்து ⋆
என் உயிரை உருக்கி உண்ணுமே ‖ **5.10.4** ‖

உண்ண வானவர் கோனுக்கு ⋆
ஆயர் ஒருப்படுத்த அடிசில் உண்டதும் ⋆
வண்ண மால் வரையை எடுத்து ⋆
மழை காத்ததும் ⋆
மண்ணை முன் படைத்துண்டுமிழ்ந்து ⋆
கடந்திடந்து மணந்த மாயங்கள் ⋆
எண்ணும் தோறும் என் நெஞ்சு ⋆
எரிவாய் மெழுகொக்கும் நின்றே ‖ **5.10.5** ‖

நின்ற ஆறும் இருந்த ஆறும் ⋆
கிடந்த ஆறும் நினைப்பரியன ⋆
ஒன்றலா உருவாய் ⋆
அருவாய நின் மாயங்கள் ⋆
நின்று நின்று நினைகின்றேன் ⋆
உன்னை எங்ஙனம் நினைகிற்பன் ⋆

பாவியேற்கொன்று நன்குரையாய் ⋆
உலகம் உண்ட ஒண் சுடரே ! ॥ **5.10.6** ॥

ஒண் சுடரோடிருளும் ஆய் நின்ற ஆறும் ⋆
உண்மையோடின்மை ஆய் வந்து ⋆
என் கண் கொளா வகை ⋆
நீ கரந்தென்னைச் செய்கின்றன ⋆
எண் கொள் சிந்தையுள் நைகின்றேன் ⋆
என் கரிய மாணிக்கமே ! ⋆
என் கண்கட்குத் திண் கொள்ள ஒரு நாள் ⋆
அருளாய் உன் திரு உருவே ॥ **5.10.7** ॥

திரு உருவு கிடந்த ஆறும் ⋆
கொப்பூழ்ச் செந்தாமரை மேல் ⋆
திசைமுகன் கரு உள் வீற்றிருந்து ⋆
படைத்திட்ட கருமங்களும் ⋆
பொருவில் உன் தனி நாயகம் அவை கேட்கும் தோறும் ⋆
என் நெஞ்சம் நின்று நெக்கு ⋆
அருவி சோரும் கண்ணீர் ⋆
என் செய்கேன் அடியேனே ॥ **5.10.8** ॥

அடியை மூன்றை இரந்த ஆறும் ⋆
அங்கே நின்றாழ் கடலும் மண்ணும் விண்ணும் முடிய ⋆
ஈர் அடியால் ⋆
முடித்துக் கொண்ட முக்கியமும் ⋆
நொடியும் ஆறவை கேட்கும் தோறும் ⋆
என் நெஞ்சம் நின் தனக்கே கரைந்துகும் ⋆

கொடிய வல் வினையேன் ⋆
உன்னை என்று கொல் கூடுவதே ॥ **5.10.9** ॥

கூடி நீரை கடைந்த ஆறும் ⋆
அமுதம் தேவர் உண்ண ⋆
அசுரரை வீடும் வண்ணங்களே ⋆
செய்து போன வித்தகமும் ⋆
ஊடு புக்கெனதாவியை ⋆
உருக்கி உண்டிடுகின்ற ⋆
நின் தன்னை நாடும் வண்ணம் சொல்லாய் ⋆
நச்சு நாகணையானே ! ॥ **5.10.10** ॥

‡ நாகணை மிசை நம் பிரான் ⋆
சரணே சரண் நமக்கென்று ⋆
நாள்தொறும் ஏக சிந்தையனாய்க் ⋆
குருகூர்ச் சடகோபன் மாறன் ⋆
ஆக நூற்ற அந்தாதி ⋆
ஆயிரத்துள் இவையும் ஓர் பத்தும் வல்லார் ⋆
மாக வைகுந்தத்து ⋆
மகிழ்வெய்துவர் வைகலுமே ॥ **5.10.11** ॥

அடிவரவு — பிறந்தவாறு வதுவை பெய்யும் கள்ள உண்ண நின்றவாறும் ஒண் திருவுருவு அடியை கூடி நாகணை வைகல்

பிறந்தவாறும் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்